**ஹாலி-எல பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 14 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி பிரதேச சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹாலி-எல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இருப்புக்களின் இனங்காணலிற்கான கொள்கையானது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான முத்திரைத் தீர்வைக்கான பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 5,000,000 ஆகவிருந்ததுடன் இது ரூபா 4,723,719 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதிக்கூற்றுக்கள் இது ரூபா 276,281 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஏனைய கடன்கொடுத்தோர்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,817,998 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய முத்திரைத் தீர்வைகளின் பெறுமதி ரூபா 2,686,482 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியை 2016 சனவரி 01 இற்கு முன்கொண்டு வருகையில் முத்திரைக் கட்டணங்களிலிருந்தான வருமானமாக ரூபா 3,686,482 தொகை மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான வீதங்கள் மற்றும் வரிகளின் நிலுவைகளானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 49,531 ஆல் மிகையாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாடு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி நிதிக்கூற்றுக்களில் ரூபா 147,714 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது.

(எ) போதைப்பொருள் இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 674,695 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்களின் பெறுமதி ரூபா 182,150 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 265,000 பெறுமதியிலான கணக்கிலிடப்படாத பல்நோக்க நடமாடும் குடிசைகளானது ஆண்டின் இறுதிவரையிலும் திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளையும் உரிய பட்டியலில் மீதிகளையும் ஒப்பீடு செய்கையில் ரூபா 18,262,171 வித்தியாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 81,770,113 ஆகவிருந்த அதேநேரம் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 55,037,652 ஆகவிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 80,045,745 பெறுமதியான ஆறு கணக்கு விடயங்கள் கணக்காய்விற்கு போதிய தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சரிசெய்யப்பட்டோ சான்றுறுதிப்படுத்தப்பட்டோ இருக்கிவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 19(xi) ஆம் பிரிவு | அற்றம்பிற்றிய சம்பத் நிலையத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான வெறுமையான நிலம் அதற்கு பொறுப்பான அமைச்சரவையின் அனுமதியில்லாமல் ரூபா 6,000 வருடாந்த குத்தகை வாடகையில் கொடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) கொள்களம் கட்டளைச் சட்டம் | |
| (i) அத்தியாயம் III இன் 21 ஆம் பிரிவு | கொள்களம் மற்றும் இறைச்சிகளை போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் அமைச்சரால் விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவுறுத்தல் இல்லாமல் சபையால் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) அத்தியாயம் III இன் 22 ஆம் பிரிவு | கொள்களங்களிற்கான சட்டங்கள் தயாரிக்கப்படடிருக்காததுடன் அத்தகைய |

| | | |
|---|---|---|
| | | கொள்கலன்கள் பொது சுகாதார அலுவலகர் மற்றும் கொல்கள கட்டுப்பாளரால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் II இன் 4 ஆம் பிரிவு | விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதனூடாக கொள்களத்திற்கு முன்னதாக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சூழல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவு | சூழல் அனுமதிப்பத்திரங்களினது கொல்களங்களின் வீடுகளிற்கான இடங்களிற்காக பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (எவ்.ஆர்) | |
| (i) | நிதிப்பிரமாணம் 142(1) | ஹாலி எல பிரதேச சபைக்கு சொந்தமான அற்றம்பிற்றியிலுள்ள காணியை வாடகைக்கு விடுவதால் முறையான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 | வேலைகளை மேற்கொள்வதற்காக 09 சந்தர்ப்பங்களில் ரூபா 871,514 முற்பணங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதும், அத்தகைய வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அத்தகைய முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 | நான்கு வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முன்னரே வடிவமைக்கப்பட்டு பிரேரிக்கப்பட்ட படிவம் 268 இன் பிரகாரம் முறையாக பராமரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | மரணமடைந்த, சேவையிலிருந்து இடையில் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 155,013 தொகையான நிலுவையாகவுள்ள உத்தியோகத்தர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 04 வாகனங்களில் எரிபொருள் நுகர்வானது பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட 2016 யூலை 30 ஆந் திகதிய 12/1/1 ஆம் இலக்க கடிதம் | ரூபா 97,945 பெறுமதியான எரிபொருளிற்குரிய 1031 கடிதங்கள் மாதாந்த எல்லையை மிஞ்சி பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,891,090 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிலிருந்து மீண்டு வரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 3,962,499 தொகையாகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தல் செயலாற்றல்

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையின் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவையாகவுள்ள வருமானம் ரூபா 5,928,420 தொகையானதுடன் மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தில், ரூபா 1,680,767 தொகை அல்லது 35.5 சதவீதம் அத்திகதியிலுள்ளவாறு நிலுவையாகவிருந்தது.

(ஆ) ரூபா 1,444,819 பெறுமதியான நீர்ச்சிட்டை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஏனைய வருமானம்

**விளம்பர பலகைகளுக்கான கட்டணத்தை அறவிடுதல்**

15 விளம்பர பலகைகளுக்கான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரை தீர்வை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையிடமிருந்து ரூபா 12,576,283 கூட்டுத்தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வை பெறவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

ரூபா 48,000 வருடாந்த குத்தகை வாடகைக்காக தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு விடப்பட்ட பிரதேசசபைக்கு சொந்தமான காணி தொடர்பான குத்தகை வாடகை நிலுவைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் சபையின் காணியை சுவீகரிப்பதற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 நிர்மாண நிர்வாகம்

ஆட்சியாளர் அபிவிருத்தி சமூகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 300,000 முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வாகனங்கள் மீதான கட்டுப்பாடு

(அ) வாகனங்களின் ஓட்ட அட்டவணையில் அவர்களுடைய கையொப்பத்தை இடாமல் உத்தியோகத்தர்களால் மூன்று கப்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 13,775

பெறுமதியான எரிபொருளானது 689 கிலோமீற்றர் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் சுருக்க அறிக்கைகளின் மூலம் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---------------------------------------------------------------------

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

-------------------------------------

பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்படுகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்